பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 03 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய பல்கலைக்கழகங்களின் முன்னாள் மாணவர்கள், இளம் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக திகழ்கிறார்கள் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கும் இரண்டு நாள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

3. இந்தியாவில் உள்ள ஆறுகளில் 6 ஆயிரத்து 300க்கும் அதிகமான டால்ஃபின்கள் இருப்பதாக வன உயிரின கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கிறது.

4. பொலிவியாவில் லாரியும், பேருந்தும் மோதிய விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 31 பேர் உயிரிழந்தனர்.

5. தேசிய வில்வித்தைப் போட்டியில் கொல்கத்தாவைச் சேர்ந்த சாஹில் ஜாதவ் தங்கப்பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மத்தியப் பல்கலைக்கழகங்களின் இரண்டு நாள் மாநாட்டில் இன்று நிறைவுரையாற்றுகிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையின் கலாச்சார அரங்கில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

முன்னதாக நேற்று மத்திய பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள், பிரபலங்கள், நிறுவனங்களின் சமூக பொறுப்பு பங்களிப்பாளர்கள் உள்ளிட்டோர் குடியரசுத்தலைவரை சந்தித்தனர்.

அவர்கள் மத்தியில் பேசிய திருமதி திரௌபதி முர்மு, நாட்டின் உண்மையான சொத்து மக்கள்தான் என்று குறிப்பிட்டார்.

நமது கல்வி முறையில் சமூக பங்களிப்பும், மதிநுட்பமும் அவசியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய பல்கலைக்கழகங்களில் படித்து பல்வேறு துறைகளில் முன்னிலை வகிப்போர் இளம் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக திகழ்வதாகவும் குடியரசுத்தலைவர் கூறினார்.

<<<<>>>>

இந்தியாவின் பாதுகாப்புத்துறையில் பெல்ஜியம் நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியா வந்துள்ள பெல்ஜியம் இளவரசி **Astrid**-ம், அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் **Theo Francken**-ம் புதுதில்லியில் நேற்று பாதுகாப்புத்துறை அமைச்சரை சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அப்போது இந்தியாவில் பெல்ஜியம் நாட்டின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான முக்கிய நடவடிக்கைகளை அந்நாட்டு நிறுவனங்கள் மேற்கொள்ள முடியும் என்று திரு. ராஜ்நாத் சிங் பரிந்துரைத்தார்.

இதன்மூலம் இந்திய தொழில் அதிபர்களின் வழங்கல் சங்கிலி நடைமுறையை ஒருங்கிணைக்க முடியும் என்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திர மோடியை பெல்ஜியம் இளவரசி இன்று புதுதில்லியில் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் நமோ செயலியில் மக்கள் அதிக அளவில் தங்களின் அனுபவங்களை பகிர வேண்டும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த செயலியில் பகிரப்படும் தகவல்களை தாம் தொடர்ந்து கண்காணித்து வருவதாக கூறியுள்ளார்.

மகளிர் தங்களின் ஊக்கமளிக்கும் அனுபவ பயணங்களை பிரதமரின் டிஜிட்டல் ஊடக செயலியில் பகிர்வதில் இருந்து, குறிப்பிட்ட சில பெண்கள் வரும் 8ஆம் தேதி மகளிர் தினத்தை ஒட்டி தேர்வு செய்யப்படுவார்கள் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

தமது இந்தப் பயணத்தின்போது இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் திரு. டேவிட் லாமி மற்றும் பல்வேறு பிரதிநிதிகளை அவர் சந்தித்து பேச்சு நடத்த உள்ளார்.

பாதுபாப்பு, வர்த்தகம், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் விவாவதிக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து அயர்லாந்திற்கு 2 நாள் பயணமாக செல்லும் திரு. ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. சைமன் ஹாரிஸ் மற்றும் உயரதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார்.

அங்குள்ள இந்திய சமூகத்தினரையும் வெளியுறவு அமைச்சர் சந்திக்க உள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே நட்பு ரீதியிலான உறவுகளை வலுப்படுத்துவது, ஜனநாயக மாண்புகளை மேம்படுத்துவது உள்ளிட்டவை குறித்து இந்த சந்திப்பின்போது ஆலோசிக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அனைத்து மாநில மற்றும் யூனியன்பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளின் இரண்டு நாள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், மாநிலங்களின் தேர்தல் நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் அரசுமுறைப் பயணமாக இன்று ஆஸ்திரேலியா புறப்பட்டுச் செல்கிறார்.

வரும் 7ஆம் தேதி வரை அங்கு பயணம் மேற்கொள்ளும் அவர், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான ராணுவ ஒத்துழைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அவரது இந்தப் பயணம் அமைந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்திய விமானப் படையை மேம்படுத்தும் திறன் தொடர்பான அதிகாரமளித்தல் குழுவின் அறிக்கையை பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. ஆர்.கே. சிங், மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கிடம் நேற்று வழங்கினார்.

விமானப் படையை மேம்படுத்துவதற்கான விருப்ப இலக்கு தொடர்பாகவும், குறுகிய கால மற்றும் நீண்டகால திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

விமானப் போக்குவரத்துத் துறையில் சுயசார்பு திட்டத்தை மேலும் ஊக்கப்படுத்துவதற்கான அவசியத்தையும் அந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

<<<<>>>>

தேசிய பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்திய தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஏற்படுத்தப்பட்டதைக் குறிக்கும் வகையில் கடந்த 1971ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

<<<<>>>>

இந்தியாவில் உள்ள ஆறுகளில் 6 ஆயிரத்து 300க்கும் அதிகமான டால்ஃபின்கள் இருப்பதாக வன உயிரின கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த 2021ஆம் ஆண்டில் இருந்து 2023ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் கங்கை, பிரம்மபுத்திரா ஆற்றுப்படுகை உள்பட 101 கிலோ மீட்டர் நீள ஆறுகளில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரியவந்துள்ளது.

இதுதவிர பிரம்மபுத்திரா உள்ளிட்ட நாட்டின் பல்வேறு முக்கிய ஆறுகளில் இந்தவகை டால்ஃபின்கள் வாழ்வதாக அந்தக் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

கங்கை ஆற்றுப்படுகையில் மட்டும் 5 ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட டால்ஃபின்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை 6 லட்சம் ரூபாயில் இருந்து 8 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

நாகப்பட்டினத்தில் நேற்று தம்மைச் சந்தித்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் அவர்களின் கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் உறுதியளித்ததாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேலும் இலங்கை சிறையில் வாடும் தமிழகத்தைச் சேர்ந்த மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் தின உதவித் தொகை 350 ரூபாய் என்பதை 500 ரூபாயாக உயர்த்தி வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டிருப்பதாக அந்தச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இலங்கை கடற்படையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வெளியுறவுத்துறை அமைச்சரை தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மீனவர் சங்க பிரதிநிதிகள் அடங்கிய குழு நேரில் சந்தித்து வலியுறுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்திய கிரிக்கெட் கேப்டன் ரோஹித் ஷர்மா குறித்து காங்கிரஸ் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறிதது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. மன்சுக் மாண்டவியா, கிரிக்கெட் வீரர்களின் உடல்மொழி குறித்த அதுபோன்ற கருத்துகள் விளையாட்டு வீரர்களின் கடின உழைப்பை சிறுமைப்படுத்துவதாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலம் அம்ரித்சரில் இந்திய எல்லைக்குள் ஊடுருவிய பாகிஸ்தானை சேர்ந்த நபரை எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

எல்லையில் ஊடுருவல் நடவடிக்கை இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்புப் படையினர் அங்கு சென்றபோது கோதுமை பயிர் வேலிக்கு இடையே சென்ற அந்த நபரை அவர்கள் சுட்டுக்கொன்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒரே வாரத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த நபர் ஊடுருவி இருப்பது இது இரண்டாவது சம்பவம் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

பொலிவியாவின் தெற்குப் பகுதியில் லாரியும், பேருந்தும் மோதி நேரிட்ட விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 31 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழப்பு குறித்து பொலிவியா காவல்துறை செய்தித்தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

காயமடைந்த 22 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

தேசிய வில்வித்தைப் போட்டியில் கொல்கத்தாவைச் சேர்ந்த சாஹில் ஜாதவ் தங்கப்பதக்கம் வென்றார்.

ஒடிசா மாநிலம் பூரியில் நடைபெற்ற சீனியர் காம்பவுண்ட் பிரிவில் இவர் 150 புள்ளிகளைப் பெற்று பதக்கத்தைக் கைப்பற்றினார்.

------------

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா – ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன.

துபாயில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30க்கு தொடங்குகிறது.

8 அணிகள் பங்கேற்கும் சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா ஆகிய அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறின.

**<<<<The End>>>>**